திரு. கே. எஸ். அப்துல் வகாப் : ஹிப்பிகளின் அடிப்படை நோக்கம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அடிப்படைக் காலத்திற்குச் செல்வதுதான் அவர்கள் நோக்கம். (சிரிப்பு)

Nuisance Caused by Vegetable Vendors.

* 19 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Commissioner of Police, Madras, is aware of the nuisance caused to free flow of traffic by vegetable vendors around the Mada Streets in Mylapore ?

காய்கறி விற்பவர்களால் இடையூறு

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மயிலை, மாடவீதிகளைச் சுற்றி, காய்கறி விற்பவர்களால் தடங்கலற்ற போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கப்படுகிறது என்பதை சென்னை, காவல் துறைக் கமிஷனர் அறிவாரா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம்.

Change of School Hours

* 20. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether there is any proposal to change the School hours ; and

(*b*) if so, the details thereof ?

பள்ளிக்கூட அலுவல் நேரங்களை மாற்றுதல்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளிக்கூட அலுவல் நேரங்களை மாற்றும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வகுப்பு நேரங்களை மாற்றுவது நன்மை பயக்கும், என்ற கருத்து பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நடைமுறையில் இதனை எந்த அளவுக்கு செயல்படுத்த முடியும் என்பதுபற்றி பரிசீலனை செய்து முடிவெடுக்க வேண்டும்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, பல பள்ளிகள் நேரத்தை மாற்றிக் கொண்டு அதைச் செயல்படுத்த முடியாமல் மீண்டும் பழைய நேரத்திற்கே வந்துவிட்டன. ஆகவே பள்ளிகளை

25th January 1972]

வற்புறுத்தாமல் தலைமையாசிரியரின் முடிவுக்கே இத்திட்டத்தை விட்டு விட்டால், அது செயல்படுவதற்குச் சௌகரியமாக இருக்குமென்பதை அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் பொதுவாக வற்புறுத்தப்படுகிற தன்மை ஏற்படவில்லை. அதுபற்றி ஆணை பிறப்பிக்கப்படவில்லை. கால மாறுதல் ஏற்படுத்துவது நன்மை பயக்கும் என்று ரேன்ஜ் அளவில் துவக்கப் பள்ளிகளில் மற்ற இடங்களிலும் ஏற்படுத்துகிறார்கள் என்று கருதுகிறேன். சிலர் தாமதமாகவே அதற்கு உடன்பட்டு வருகிறார்கள். நன்மை பயக்கும் என்று சில பள்ளிகளிலும் வைத்திருக்கிறார்கள். அதில் நன்மை இருப்பதாகவும் அவர்கள் சொல்கிறார்கள். வைணவக் கல்லூரி, கந்தசாமி கல்லூரி ஆகியவற்றில் காலை 7½ மணிக்குத் துவங்கி 1½ மணிக்கு முடிக்கிறார்கள். பேராசிரியர்கள் அதில் நன்மை இருக்கிறது என்று கருதுகிறார்கள். அதை வற்புறுத்தி இன்ன நேரத்தில்தான் துவங்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. இப்படிப்பட்ட நேரம் படிப்புக்கு ஏற்றதாக இருக்குமென்று எடுத்துத் தெரிவிக்கப்பட்டது.

Madras Zoo

* 21 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether the Government have received any complaint regarding the neglect of animals in the Madras Zoo; and

(*b*) if so, the action taken thereon ?

சென்னை விலங்குக் காட்சி சாலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையிலுள்ள விலங்குக் காட்சிச் சாலையில் விலங்குகள் சரிவர கவனிக்கப்படாமலிருப்பது குறித்துப் புகார் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். விலங்கு காட்சி சாலையை வேறு வசதியான இடத்திற்கு மாற்றுவதற்கான யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த விலங்குக் காட்சி சாலையிலுள்ள பல விலங்குகள் நோயுற்ற நிலையில் இருப்பதாகவும் அதைக் கண்காணிப்பதற்கு தனியாக மிருக வைத்தியர் ஒருவர் இல்லை என்றும் சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?